Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# Social Perspective in Thilagavathi Myths

**N. Anitha Selin,** Research Scholar, Nesamani Memorial Christian College, Kaniyakumari, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-7777-0359
**DOI: 10.5281/zenodo.6619196**

## Abstract

*The values of the ancient social sentiments were recorded by the Sangam contemporaries in the Sangam literary songs by their scholarly sophistication. They have stated the social values of the time. In the myths created by Tamil folk scholars in the nineteenth century, the feelings and emotions of human beings, which is a part of society are given to human beings by the ancient society. Emotions caused by problems are also told in short stories and novels. Thus,* Thilagavathi*'s creative legends illustrate the recording of the mental feelings of men and women in economically backward families.*

**Keywords:** Human feelings, Society, Problem feelings, Myths.

## Reference

[1] Thilagavathi. *Seethayanam*, *Story Part 1*, Ruthra Publication, Arulanada Ammal Nagar, Tanjore, 2002.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:**NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐஎஸ்எஸ்எண்:2583-0481

# திலகவதியின் புனைவுகளில் சமூகநோக்கு

**நே. அனிதா செலின்,** முனைவர் பட்ட ஆய்வாளர்,
நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரி, கன்னியாகுமரி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-7777-0359
DOI: 10.5281/zenodo.6619196

**ஆய்வுச்சுருக்கம்**

பண்டைய சமூக உணர்வுகளின் மதிப்புகளை சங்ககாலப் புலவர்கள் தங்கள் புலமை நுணுக்கத்தால் சங்க இலக்கிய பாடல்களில் பதிவு செய்திருந்தனர். அக்கால சமூக விழுமியங்களைக் கூறியது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ்ப்படைப் பாளர்களினால் உருவான புனைவுகளில் இன்றைய சமூகத்தின் அங்கமான மனிதர்களின் உணவர்களும், மனிதர்களுக்கு சமூகத்தால் கொடுக்கப்படுகின்றன. பிரச்சனைகளால் ஏற்படக்கூடிய உணர்வுகளும் சிறுகதைகளாகவும், புதினங்களாகவும் கூறப்பட்டுள்ளன. அவ்வகையில் திலகவதியின் படைப்பிலக்கியமான புனைவுகளில் பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களில் பெண், ஆண் போன்றோர்களின் மனஉணர்வுகள் பதிவு செய்திருப்பதை விளக்கப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்**: சமூகத்தின் மனித உணர்வுகள், புனைவுகளில் பிரச்சனைக்குரிய உணர்வுகள்.

**முன்னுரை**

வாழ்வியல் களங்களை அடியொற்றி குறிப்பாகப் பெண்ணின் பன்முகங்களைப் புலப்படுத்துவதிலும் திலகவதியின் படைப்புகள் கதை இலக்கிய வரிசையில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுவருகின்றன. பழங்கதை ஆய்வு என்பது பெண்ணியத்திறனாய்வில் ஒரு புதிய போக்காகும். மேரிடாலி, ஆனிஸ்ப்ராட் என்ற பெண்மணிகள் மரபுவழி வந்த பெண்மைப் பண்புகளை எடுத்துக்காட்டி, அதன்வழி, பெண்கள் காலங்காலமாக அடிமை வாழ்வுக்குப் பழக்கப்பட்டு வந்துள்ளதை விளக்க முற்படுவதுடன், அப்பழங்கதைகளை நவீன சிந்தனைக்கேற்ப மறுஆக்கம் செய்துள்ளனர். தமிழில் வ.ரா., புதுமைப்பித்தன், இந்திரா பார்த்தசாரதி போன்றவர்களின் படைப்புகளில் இவ்வாய்வுப்போக்கு படைப்பிலக்கிய உத்தியாகப் பயன்பட்டுள்ளது. திலகவதியின் மானுடம் வெல்லும் சிறுகதை சமூகத்தில் கிடக்கும் சமூக அநீதியை இடித்துரைக்கிறது.

**மானுடம் வெல்லும் சிறுகதையில் சமூகஉணர்வு**

**தாய்மை உணர்வு**

சமூகத்தில் ஆங்காங்கே நிகழுகின்ற விபத்துக்களினால் ஏற்படக்கூடிய உயிரிழப்புக்களும் நோயினால் ஏற்படக்கூடிய உயிரிழப்புக்களையும் விதியே என நினைத்து மனஆறுதல்அடையும் மானுடஇனம் நம் மனிதஇனம் மட்டுமே. அந்த வகையில் கேசவனும் இவனது தங்கை பரிமளாவும் சிறுவயதாக இருக்கும்போதே குடும்பப் பொறுப்பைச் சுமக்க வேண்டியதாயிற்று. தன் கல்வியை இடையிலேயே நிறுத்தவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு வேலைக்குச் சென்று தன் தங்கையை வளர்த்து ஆளாக்கி ஒருவன் கையில் பிடித்துக்கொடுக்கும் வரையில் என்று, கேசவனின் எண்ண ஓட்டம் கதைகளில் பதியமிட்டிருப்பதை நோக்கலாம்.

கேசவனின் தாய் தன்மகள் எப்பொழுது பார்த்தாலும் புத்தகமும் கையுமாகத்தான் இருப்பான். அவன் பத்தாம் வகுப்பில் நல்லமார்க் பெற்று முதலிடம் பிடிக்கவேண்டும் என்ற ஆசையும் மேற்கொண்டு படிக்க தந்தியில் பணம் தருவார்கள் என்று பெட்டிக்கடை குப்பன் சொல்லியதை எண்ணிப்படிப்பே என்று கிடந்தான். இதைக் கண்ட அலமேலு அவ்வப்போது மகனுக்கு புத்திமதி சொல்லுவாள்.“ஏண்டா பையா சந்தைக்கு போறதும், சரக்குபோடறதும், கடையிலேயா வாரஞ்செய்யறதும் அந்த ஒரு மனு சந்தான் எத்தினி காலம் பார்க்கும்? அங்கங்கே புள்ளங்க பத்துப் பன்னிரண்டு ஆவறதுள்ள என்ன சாமர்த்தியமாக வேலை வெட்டி பண்ணி காசு பாரக்குது. நீ என்னடான்னா வெட்டி வேலை பண்ணிகிட்டே எந்நேரமும் பொஸ்தகமும் பேனாவும்னு அழிக்குறே” என்றாள். இவற்றை நோக்கும் போது அலமேலு வாயிலாக ஆசிரியர் படிப்பின் பயன்பாட்டினை அறியாத மக்கள் சமூகத்தில் இருப்பதைப் படம்பிடித்துக் காட்டுகிறார்.

**சாதிமறுப்புத் திருமணம் சொல்லும் பாடம்**

சுந்தரம் சாதிமறுப்பு த்திருமணம் செய்து கொண்டதால் சுந்தரத்தின் தாயிற்குப் பிடிக்கவில்லை. இதனால் தன்மகள் வீட்டில் வாழ்வதென்று முடிவு செய்கின்றாள். இப்படியே காலங்கள் கரைந்தோட ஒருநாள் சுந்தரமும் அலமேலுவும் விபத்தில் இறக்க நேரிட்டது. “வேலாயி ஒரே மவன் ஜாதிவிட்டு கட்டிட்டான்னு இது நாவரைமவளோடயே இருந்தே. இப்ப ஒண்ணு இது கரெண்டையும் அங்க கூட்டிட்டுப் போயிரு இல்ல நீயாச்சும் வந்து அதுகளோட இரு” புதுச்சோகம் கூட வேலாயியின் இதயத்தை ஈரமாக்கவில்லை. அவளைப் பொறுத்தவரையில் மகனும் கூடபோனதால் ஏற்பட்ட கட்டாய நிர்ப்பந்தத்தால் தான் அவள் சாவுக்கே வந்தாள். ஊர்முழுக்கப் பொருமியது ஆனான கெழவிக்கு இந்த ஆணவம் ஆகாது ஆனாலும் இந்த கல்மனசுக்காரியிடம் கட்டாயப்படுத்திப் பிள்ளைகளை விட்டு வைத்தாலும் அதுங்களுக்கு என்ன மாதிரி அன்பும் அரவணைப்பும் கிடைக்கும்? சமூகத்தில் நடக்கும் சாதிமறுப்புக் காதல் திருமணங்கள் நடந்தேறினால் ஏற்படக்கூடிய இழப்புக்களை ஆசிரியர் சமூக அகக்றையொடு சுட்டிச் செல்வது நோக்கத்தக்கது.

**பாட்டியின் அநீதி**

கேசவன் தன் தங்கையை எப்பாடுபட்டாவது நல்ல இடத்தில் மணம் முடித்துக்கொடுக்க வேண்டும் என்று தீவிரமாக இருந்தான். கிருஷ்ணமூர்த்தி என்பவர் திருமணம் செய்து கொள்ள சம்மதித்தும் ஆனால் அவருக்கு வேலை கிடைத்த பின்தான் திருமணம் என்று உறுதியாகச் சொன்னான். கிருஷ்ணமூர்த்திக்கு வேலைகிடைப்பதற்கு பணம் கட்ட வேண்டும். அவ்வாறு பணம் கட்டினால் வேலை கிடைக்கும் வேலைகிடைத்தால் தனது தங்கையின் திருமணம் நடைபெறும் என்பதில் உறுதியாய் இருந்தான் கேசவன். தன் தந்தை சந்திரகுமார் பாட்டியிடம் கொடுத்த ஐந்தாயிரம் ரூபாய் பணத்தைக் கேட்கச் சென்றான். அத்தை ஒரு புறமும் பாட்டி மறுபுறமும் ஏளனமான பேச்சுக்களையும் ஏச்சுக்களையும் பேசினர். இதனால் ஏற்படும் கோபத்தினை அடக்கிக் கொண்டு முதலில் இரண்டாயிரம் பின்பணம் இருக்கும்போது கொடுங்கள் என்றான். ஆனால் பாட்டியோ இன்னிக்கு பூராவும் பேசினாலும் இரண்டு ரூபாய் தேராது இங்க. சோலியத்த தொவரங்குடியானுக்கு தங்கவேலு தொக்காப்போனான என்று பாட்டியின் வீணான பேச்சுக்கள் கேசவனை மனிதநிலையிலிருந்து மிருகநிலைக்குமாற்றியது. இக்காட்சி மனிதனின் ஐந்தாவது அறிவினை முன்னிறுத்துகிறது.

**கேசவனின் ஐந்தறிவு நிலை**

கேசவன் தன்பாட்டியின் அந்த அநீதியான சொல்லைக் கேட்டவுடன் மனம்கொதித்து அருகில்

செக்கச்செவேலென்றிருந்ததர் பூசணியின் நடுவில் இருந்த கத்தியை எடுத்து நேரே தொண்டைக்குழியில் செருகினான். சிலீர் என்ற ரத்தம் கைகளில் உறைந்த பின்னர்தான் நிஜத்தைத் தரிசித்தவன் போல் விழித்தான். அய்யோ பரிமளா நானல்லவா பாட்டியை விட பெரியகொடுமை உனக்கு செய்துவிட்டேன் என்று கதறினான். குற்றத்தை ஒப்புக்கொண்டு தண்டனை அடைந்தான்.

**‘சீதாயணம்‘ சிறுகதையில் பெண்ணிய நோக்கு**

திலகவதி தன்னுடைய சீதாயணம் சிறுகைதையில் சீதையை இத்தகைய திறனாய்வுப்போக்கில் மறுஉருவாக்கம் செய்துள்ளதை பெண்ணியப்பார்வையில் ஆராயப்படுகின்றது. இராமன் வண்ணான் சொல்லுக்கு முக்கியத்துவம் கொடுத்து, நிறைமாத கர்ப்பிணியான சீதையைக் காட்டிற்கு அனுப்புகிறான். அங்கே சீதை வால்மீகி முனிவரின் ஆசிரமத்தில் ஆதரவில்லவன், குசன் இருவரைப் பெற்றெடுக்கின்றாள். வால்மீகியின் குடியில் பதினெட்டு ஆண்டுகள் முடிந்த நிலையில், சீதை இராமனுடன் தான் பகிர்ந்து கொண்ட வாழ்வியல் களங்களை நினைவுகூறும் வகையில் கதை தொடங்குகிறது. தன் தந்தை ஜனகன் இராமனுக்குத் தன்னை மணம்முடித்துக் கொடுக்கும்போது, “இதோ என்மகள் சீதை, மகனே நீசொல்லு தருமவழியில் இவள் உன்னுடைய துணையாகச் செல்வாள். கற்பைக் காத்து மிகக் காப்பியவாதியாக உன் நிழலைப்போல உன்னைப்பற்றி நிற்பாள். இப்போதும் பிரியமாட்டாள்” என்று கரம் பிடித்துக் கொடுத்து, உறுதி அளிக்கின்றான். ஆனால், சீதை பதினெட்டு ஆண்டுகள் பிரிந்து வாழ்வதை நினைத்துப் பார்க்கிறாள். ஆரம்பத்துயர்வடுவதாக மாறி, உயிரிலும், உடலிலும் கலந்து விட்டதை உணர்கிறாள். ஆனால், இதற்குக் காரணம், தான் அல்ல என்பதை அவளால் உரக்கச் சொல்ல முடியாததைக் கதை புலப்படுத்துகின்றது. “எல்லாம் நிஜம் எல்லாமும் பொய்சொற்களால் உருவாக்கி சொற்களால் பிணைந்து சொற்களில் சிறைப்பட்ட சீதை அரசு படைத்த சீதை” என்று மதிப்பீடு செய்வது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. சீதை, வால்மீகி அமைத்துத் தந்த குடிலில் படுத்திருக்கிறாள். இராமனைக்கை பிடித்த பின், அயோத்தியின் அரண்மனையில் தான் சிறுபெண்ணாய் விளையாடி, வாழ்ந்த வாழ்க்கையை நினைத்துப் பார்க்கிறாள்.

சீதை கைகேயி ஏவலால் இராமன் காடேகிய போது, நின் பிரிவினும் சுடுமோ காடு என்று தான் உடன் புறப்பட்டுச் சென்றதை எண்ணுகிறாள். எந்த நிலையிலும் இராமனின் நிழலாக வாழ்ந்த வாழ்க்கையும் பொருளற்றுப் போனதைச் சிறுகதை தெளிவுபடுத்துகின்றது. மனைவி என்ற பங்கு நிலையில் ஆணின் அதிகாரத்தால், அடக்குமுறையால் பெண்ணினது தனித்தன்மை, ஆளுமை போன்றவை சிதைக்கப்படுகின்றன. பாலின வேறுபாட்டினால், குடும்பத்திலும் சமுதாயத்திலும் ஆணுக்கு முதன்மையும், பெண்ணுக்கு இரண்டாந்தாரக் குடியுரிமையும் தரப்படுகின்றன என்ற பெண்ணியவாதிகளின் கருத்துக்கோட்பாட்டிற்கு இதிகாசத் தலைவியும் விதிவிலக்கல்ல என்பதைச் சிறுகதை உணர்த்துகிறது. “தனக்கு விதித்த வதையைப் பேச எவரும் முன் வராதபோது, அவர்களின் தவமும் வாதமும் நியாயமும் தருமமும்” என்ற எண்ணத்தில் அவர்களுடைய கேள்விகளுக்கு அவள் பதில் சொல்லாமலேயே நகர்கிறாள். பேரரசர்கள் அசுவமேதயாகம் செய்யும் பட்ட மகிஷி பக்கத்தில் இருக்க வேண்டும் என்பது விதி. அதனால் ஏகபத்தினி விரதனான இராமன் பொன்னால் சீதையின் சிலைசெய்து, பக்கத்தில் இருத்தியாகத்தை முடிக்கிறான். அவனுடைய ஏகபத்தினி விரதத்தை அறிந்து காவிய சீதை மகிழ்வாக வால்மீகி காவியம் கூறுகின்றது. ஆனால் திலகவதியின் சீதை, முகத்தில்,

**”இதழ் கடையில் அலட்சியமும் எள்ளலும் வரக்தியும் கலந்த தான**
**ஒரு புன்னகை சஷண நேரம் மின்னி மறைந்தது”**

என்பதன் வழி உயிரும் சதையுமான மனைவியை, கர்ப்பிணியைக் காட்டிற்கு அனுப்பிவிட்டு, உலகம் மெச்சுவதற்காக ஏற்றுக் கொண்ட ஏகப்பத்தினி விரதம் கண்டு சீதையின் மனதில் ஏற்பட்ட பொருமலை திலகவதி அழுத்தமாகச் சுட்டிக்காட்டுகிறார்.

இராமன் தன் பிள்ளைகள் வால்மீகி ஆதரவில் வளர்வதை அறிந்து கொள்கிறான். அதனால், வால்மீகி சீதையை, குழந்தைகளுடன் அயோத்திக்கு அழைத்துச் செல்ல முற்படுகிறார். அப்போது அவர் சீதையிடம், “நாளை சபையில் உன் கற்பின் பொற்பை நிலை நாட்டலாம்” என்று அழைக்கிறார். அதைக்கேட்ட சீதை மனம் எரிகின்றது. வால்மீக்குச் சம்மதம் சொல்லாமல் நிதானமாக யோசிக்கத் தொடங்குகிறாள். “மீண்டும் வண்ணான் வைத்தியன் எதையாவது சொன்னால் மீண்டும் வனவாசமா?” என்று நினைத்துப் பார்க்கிறாள். “அரக்கனான வீடணனுக்கு இருந்த மேதா விலாசம், விலங்கினமான அனுமனுக்கு இருந்த தெளிவு இராமனுக்கு இல்லை. இப்போதும் கூட இராமன் பச்சாதாபத்துடன் தன் செயலுக்கு வருந்தவில்லை. குற்றவாளியைக் கூண்டில் ஏற்றி, நியாயம் விசாரிக்கும் மன்னனாகவே அவளுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் தருகின்றான்”. திலகவதியின் சீதை தெளிவாகச் சிந்திக்கிறாள். தன்மானத்துடன் சிந்திக்கிறாள். வால்மிகியின் சீதை தன் அன்னை நிலமகளுடன் சேர்ந்து கொண்டதாகக் கூறுவர்.

**துணைநூற்பட்டியல்**

[1] திலகவதி. *சீதாயணம்*, *திலகவதிகதைகள்*, *பகுதி 1*, ருத்தராபதிப்பகம், அருளானந்தஅம்மாள் நகர், தஞ்சாவூர், 2002.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.